# அலகு I

## கவிதை இலக்கியம்

தமிழ்க்கவிதை உள்ளடக்கத்திலும் உருவத்திலும் மறுமலர்ச்சி அடைந்த காலம் இருபதாம் நூற்றாண்டு. இம்மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் பாரதியார். இவர் சொல் புதிது; சுவை புதிது; பொருள் புதிது; சோதி மிக்க நவ கவிதை என்னும் கொள்கையின் அடிப்படையில் தம் கவிதைத் தேரைச் செலுத்தியவர். பண்டிதர்களுக்கு மட்டுமன்றிப் பாமரர்களுக்கும் எளிதில் புரியும்படித் தமிழ்க் கவிதை மரபை மாற்றிய பெருமையும் இவருக்குண்டு. உள்ளடக்கத்தில் மட்டுமன்றி உருவத்திலும் சில படைப்பு முயற்சிகளைச் சோதனை செய்தவர் பாரதி. இவரது வசன கவிதைகளை இதற்குச் சான்று காட்டலாம். இவ்வசன கவிதைகளின் வளர்ச்சியே புதுக்கவிதை. இன்றைய புதுக்கவிதையின் பிதாமகன் என்று அறியப்படுபவர் ந. பிச்சமூர்த்தி. பாரதிக்குப்பின் தமிழ்க் கவிதை உலகில் ஏற்பட்ட மாற்றங்களைத் தெரிந்து கொள்வதற்கும், பொதுவாக அவற்றில் அடங்கியுள்ள பண்பாட்டுக் கூறுகளை உணர்ந்து கொள்வதற்கும், சொந்தமாகக் கவிதைகள் படைக்கவும், கவிதைகளைச் சுவைத்துத் திறனாய்வு செய்யவும், வாழ்க்கை வரலாறு, பட்டிமன்றம், கவியரங்கு போன்றவற்றில் மாணவர்கள் ஈடுபட்டுத் திறன் பெறவும் இவ்வலகு துணைபுரியும்.

# 1. பாரத தேசம்

சுப்பிரமணிய பாரதியார் (1882-1921) பாடல்களை முன் வகுப்புகளில் படித்திருப்பீர்கள். மனம், மொழி, மெய்யால் நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்ட தேசிய கவி பாரதியின் தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் 'பாரத தேசம்' என்னும் பாடல் இங்குப் பாடப்பகுதியாக வந்துள்ளது. இப்பாடல் பகுதிகளைத் 'தேசிய கீதம்' என்னும் பிரிவில் காணலாம். எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்துகொள்ளக் கூடிய சந்தம், யாவரும் விரும்பும் இசையமைப்பு முதலியன பாரதியார் பாடலுக்குப் பெருஞ்சிறப்பைத் தருகிறது. இருபதாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் பாரதி யுகம் தோன்றிற்று. நாட்டுவிடுதலை உணர்வு பாரதியார் கவிதைகள் பலவற்றில் ஊடுருவித் துடிப்புடன் விளங்குகிறது. அவர் சாதாரண மக்கள் வாழ்க்கையையே தம் கவிதைகளுக்குப் பொருளாகக் கொண்டார். பாரத நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு வழி வகுக்கும் பாடல் இங்குத் தரப்பட்டுள்ளது.



பல்லவி

பாரத தேசமென்று பெயர்சொல்லு வார்- மிடிப்
பயங் கொல்லு வார்துயர்ப் பகைவெல்லு வார்

சரணங்கள்

1. சிந்து நதியின்மிசை நிலவினி லே
சேரநன் னாட்டிளம் பெண்களுட னே
சுந்தரத் தெலுங்கினிற் பாட்டிசைத் துத்
தோணிக ளோட்டிவிளை யாடிவரு வோம்.
(பாரத)

2. கங்கை நதிப்புறத்துக் கோதுமைப்பண் டம்
காவிரி வெற்றிலைக்கு மாறுகொள்ளு வோம்;
சிங்க மராட்டியர்தம் கவிதை கொண் டு
சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்.
(பாரத)

3. காசி நகர்ப்புலவர் பேசும்உரை தான்
காஞ்சியில் கேட்பதற்கோர் கருவிசெய்
வோம்;
ராசபுத் தானத்து வீரர்தமக் கு
நல்லியற் கன்னடத்துத் தங்கம் அளிப் போம்.
(பாரத)

4. பட்டினில்ஆடையும் பஞ்சில் உடை யும்
பண்ணி மலைகளென வீதி குவிப் போம்;
கட்டித் திரவியங்கள் கொண்டுவரு வார்
காசினி வணிகருக்கு அவை கொடுப் போம்.
(பாரத)

5. ஆயுதம்செய் வோம் நல்ல காகிதம் செய் வோம்
ஆலைகள் வைப்போம் கல்விச் சாலை
கள்வைப் போம்;
ஓயுதல்செய் யோம்தலை சாயுதல்செய் யோம்
உண்மைகள் சொல் வோம்பல வண்மை
கள்செய் வோம். (பாரத)

6. குடைகள்செய் வோம் உழு படைகள்செய்வோம்;
கோணிகள் செய்வோம் இரும்பாணிகள் செய்
வோம்;
நடைகள் பறப்புமுணர் வண்டிகள் செய் வோம்;
ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள்செய் வோம்.
(பாரத)

7. மந்திரம் கற்போம்வினைத் தந்திரம் கற்போம்;
வானையளப் போம்கடல் மீனையளப் போம்;
சந்திரமண் டலத்தியல் கண்டுதெளி வோம்
சந்திதெருப் பெருக்கும் சாத்திரம் கற்போம்.
(பாரத)

8. காவியம் செய்வோம் நல்ல காடுவளர்ப் போம்
கலைவளர்ப்போம் கொல்ல ருலை வளர்ப்
போம்
ஓவியம்செய் வோம் நல்ல ஊசிகள்செய் வோம்
உலகத் தொழிலனைத்து முவந்துசெய்
வோம்.

மகாகவி பாரதியார் கவிதைகள்

-சுப்பிரமணிய பாரதியார்

**விடை காண்போம்**

- நீர்ப்பாசன மேம்பாட்டிற்குப் பாரதி கூறும் வழி யாது?
- நாட்டின் முன்னேற்றத்திற்கு எந்தெந்தத் தொழில்களுக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டுமெனப் பாரதி கூறுகின்றார்.
- நாடு வளம்பெறப் பாரதி கூறும் கருத்துகளைத் தொகுத்துத் தருக.

# 2. கருணைக் கடல்

இருபதாம் நூற்றாண்டின் முப்பெருங் கவிஞர்களில் ஒருவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை (1876–1954). இனிய எளிய கவிதைகள் பல படைத்துக் கவிமணி என்ற பாராட்டைப் பெற்றவர். இவர் எழுதிய பாடல்கள், 'மலரும் மாலையும்' என்ற தொகுப்பாக வெளிவந்துள்ளது. தாய்வழிச் சமுதாயத்தில் நிலவிய சீர் கேடுகளை அங்கதச் சுவையுடன் சுட்டிக்காட்டி, அவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுவதற்காக இவர் எழுதிய நூல் 'மருமக்கள் வழி மான்மியம்'. ஆங்கில மொழியில் எட்வின் அர்னால்டு புத்த பெருமானைப்பற்றி எழுதிய 'Light of Asia' எனும் நூலை ஆசிய ஜோதி என்ற தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார். இவரது இன்னொரு மொழி பெயர்ப்புநூல் 'உமர்க்கய்யாம் பாடல்கள்'. மேலும் கல்வெட்டு ஆய்வுக் கட்டுரைகள் பல எழுதியுள்ளார். இவரது கவிதைச் சிறப்பைப் போற்றும் வகையில் தமிழக அரசு இவர் படைப்புகளை நாட்டுடமையாக்கியுள்ளது.

(அரசவாழ்வைத் துறந்து நள்ளிரவில் வெளிப்பட்டுச் சென்ற புத்தர், பிம்பிசார மன்னனுடைய யாகத்துக்காகக் கொண்டு போகப்பட்ட ஆட்டு மந்தையின் மத்தியில், துன்புற்றிருந்த ஒரு நொண்டி ஆட்டுக் குட்டியைத் தம் தோளில் சுமந்துகொண்டு சென்று யாகசாலையை அடைந்து மன்னனுக்கு அறவுரை போதித்து, நாடெங்கும் உயிர்க்கொலையை நிறுத்திய வரலாறு இதனுள் கூறப்படுகிறது.)

ஆட்டு மந்தையைக் கண்டு புத்தர் இரங்குதல்

1. மந்தை பெரியமந்தை – உணவின்றி
 வாடி மெலியும்மந்தை,
சிந்தை தளரும்மந்தை – நடக்கவும்
 சீவனிலாத மந்தை.

2. கண்ணிலே கண்டபுல்லை – நின்றொருவாய்
 கௌவிட வொட்டாரையோ!
தண்ணீர் குடிப்பதற்கும் – விலகிடச்
 சம்மதி யாரேஐயோ!

3. காடு மலைகளெல்லாம் – ஓடியோடிக்
 கால்களும் ஓய்ந்தனவோ?
ஆடுக ளாயிடினும் – எவரிவ்
 அநியாயம் செய்வரையோ!

4. தன்னந் தனியாகி – ஒருமறி
 தாவிமுன் ஓடுதையோ!
பின்ஓர் இளமறியும் – கிந்தியிங்கு
 பீடைப் படுதேஐயோ!

5. கல்லெறி கொண்டதுவோ? – விழுந்தொரு
 கால்முட மானதுவோ?
செல்லும் வழிநீள – உதிரமும்
 சிந்திப் பெருகுதையோ!

6. ஓடும் மறிதேடித் – தாயுமுன்னில்
 ஓரடி வைத்தவுடன்
வாடும் மறியை எண்ணி விரைந்துபின்
 வந்து தயங்குதையோ!

தாயாட்டின் துயர் போக்குதல்

7. இத்தனையும் கண்டுமனம் இரங்கி,
 நொண்டும்
 இளமறியை இருகரத்தின் எடுத்து, வையம்
அத்தனையும் தாங்குபுயம் அணிய ஏந்தி,
 அருளுருவாம் அண்ணலும் அத்தாயை
 நோக்கி;

8. "அல்ல லுறவேண்டாம் – இனித்துயர்
 ஆறி வருவாயம்மா!
செல்லு மிடத்தில் உன்தன் – மதலையைச்
 சேர்த்து விடுவேனம்மா.

9. ஏழைப் பிராணிகளின் – இடர்களைந்து
 இன்ப மளிப்பதுபோல்,
வாழும் உலகிதனில் – செயுமொரு
 மாதவம் வேறுமுண்டோ?

10. மீளாத் துயர்க்கடலில் – உயிரெலாம்
 வீழ்ந்து முழுகையிலே,
பாழாங் குகைதேடிச் – செயுந்தவம்
 பாவமே ஆகுமம்மா!"

இடையரைக் கண்டு, இந்த ஆடுகள் எங்கே

செல்கின்றன என்று வினவுதல்

11. என்றுகனிந் துளமுருகி எழுந்த காலை,
எமன்விட்ட தூதுவர் ஆட்டை யெல்லாம்
குன்றிருந்து துரத்திவரு மவரைக் கண்டு
குவலயத்தில் அருள்மாரி பொழியும் ஐயன்;

12."மாலைப் பொழுதின்னும் ஆகவில்லை
–வெயில்
மண்டை பிளந்து வெடிக்குதையோ!
சாலை வழிஇந்த ஆடுகளும் – எங்கு
சாய்ந்து செலுமையா கூறும்" என்றான்.

இடையர் மறுமொழி கூறுதல்

13. அம்மொழி கேட்டவ் விடையருமே – "எம்மை
ஆளும் இறைவன தாணையினால்
செம்மறி நூறுவெள் ளாடும் ஒரு நூறு
சேர்த்து வருகிறோம்" என்றுரைத்தார்.

14. இன்றிரா யாகம் முடியுதென்றார் –அதில்
இத்தனை யுங்கொலை யாகும் என்றார்;
நின்றுசொல நேரம் இல்லை என்றார் –
இன்னும்
நீண்ட வழிபோக வேண்டும் என்றார்.

15. வள்ளலும் உள்ளம் வருந்தி, யானும் – அந்த
மாமகம் காண வருவேனென்று,
துள்ளும் மறியுஞ் சுமந்துகொண்டு – தாயும்
சோர்ந்து தொடர வழிநடந்தார்.

இராஜகிருக நகரத்தை அடைதல்

16. மானேந்தும் ஈசனுளம் நாண, ஆட்டின்
மறியேந்து பெருங்கருணைப் புனித வள்ளல்,
வானேந்து மதில்மீது கொடிகள் ஆடும்
மாநகரின் திருவாயில் வந்த போது!

புத்தர் யாகசாலை சென்றடைதல்

17. வையமிசை உயிர்கள்படும் துயரை எண்ணி
மறுகும்உளத்து அயலொன்றும் அறியா னாகி;
ஐயனும் அவ் வீதிவழி நடந்து, மன்னன்
அரிய மகம் செய்யுமிடம் அணுகி னானே.

யாகசாலை வருணனை

18. தாரணி மன்னவன் பிம்பிசாரன் –யாக
சாலை நடுவினில் வந்து நின்றான்;
ஆரணம் ஓதிய அந்தணரும் – நிரந்து
அங்கிரு பக்கமாய்க் கூடி நின்றார்.

19. வேதம் விதித்த விதிமுறையில் – ஒரு
வெள்ளாடு கண்டு பிடித்துவந்து,
பாதக மான பலியிடவே – அங்கு
பாரில் கிடத்தி யிருந்தாரம்மா!

20. ஆடுகள் விட்ட உதிரமெல்லாம் – அங்கோர்
ஆறாக ஓடிப் பரந்ததம்மா!
நாடியவ் வேள்விக் களத்தை விரித்திட
நாவும் நடுங்கி ஒடுங்குதம்மா!

21. நீட்டிக் கழுத்தை அறுப்பதற்கோ? – அதன்
நெஞ்சை வகிர்ந்து பிளப்பதற்கோ?
தீட்டிய கத்தியும் கையுமாக – ஒரு
தீக்ஷிதர் முன்வந்து நின்றாரம்மா!

அறிவுரை கூறுதல்

22. நின்றவர் கண்டு நடுங்கினரே – ஐயன்
நேரிலே நிற்கவும் அஞ்சினரே;
துன்று கருணை நிறைந்தவள்ளல் – அங்கு
சொன்ன மொழிகளைக் கேளும், ஐயா!

23. 'வாழும் உயிரினை வாங்கிவிடல் – இந்த
மண்ணில் எவர்க்கும் எளிதாகும்;
வீழும் உடலை எழுப்புதலே – ஒரு
வேந்தன் நினைக்கினும் ஆகாதையா!

24. யாரும் விரும்புவ தின்னுயிராம் – அவர்
என்றுமே காப்பதும் அன்னதேயாம்;
பாரில் எறும்பும் உயிர் பிழைக்கப் – படும்
பாடு முழுவதும் அறிந்திலீரோ?.

25. காட்டும் கருணை யுடையவரே – என்றும்
கண்ணிய வாழ்வை யுடையவராம்;
வாட்டும் உலகில் வருந்திடுவார் – இந்த
மர்மம் அறியாத மூடரையா!

26. ஆட்டின் கழுத்தை அறுத்துப் – பொசுக்கிநீர்
ஆக்கிய யாகத்து அவியுணவை
ஈட்டும் கருணை இறையவர் – கைகளில்
ஏந்திப் புசிப்பரோ? கூறுமையா!

27. மைந்தருள் ஊமை மகனைஒருமகன்
வாளால் அரிந்து கறிசமைத்தால்,
தந்தையுங் உண்டு களிப்பதுண்டோ?
இதைச்
சற்றுநீர் யோசித்துப் பாருமையா!

28. காடு மலையெலாம் மேய்ந்துவந்து –
ஆடுதன்
கன்று வருந்திடப் பாலையெல்லாம்
தேடிஉம் மக்களை ஊட்டுவதும் – ஒரு
தீய செயலென எண்ணினீரோ!

29. மேடையில் நீங்களும் மூடிப்படுத்திட
மெல்லிய கம்பளி தானளித்து,
வாடையி லாடிக் கொடுகுவதும் – அதன்
வஞ்சகச் செய்கையோ, சொல்லும் ஐயா?

30. அம்புவி மீதில்இவ் வாடுகளும் – உம்மை
அண்டிப் பிழைக்கும் உயிரலவோ?
நம்பி யிருப்பவர் கும்பி எரிந்திடில்
நன்மை உமக்கு வருமோ ஐயா?

31. காட்டுப் புவியின் கொடுமையஞ்சி – உங்கள்
கால்நிழல் தங்கிய ஆடுகளை
நாட்டுப் புலியெனக் கொல்லுவதோ? – அந்த
நான்மறை போற்றிய நீதிஐயா!

32. பிள்ளையைக் கொன்று கறிசமைத்தீர் – அதன்
பெற்றோரை உண்ண அழைத்து நின்றீர்;
வள்ளலே உள்ளந் தெளிந்தவரே – இது
வாழ்வை யளிக்கும் செயலாமோ?

33. மன்னுயி ரெல்லாம் உலகில் – ஒருதாயின்
மக்களென் றுண்மை அறிந்திலீரோ?
தன்னுயிர் போற்றிப் பெரும்பழி செய்வது
சண்டாளர் கண்ட நெறியலவோ?

34. பாரில் உதிரம் குளிப்பதனால் –ஒரு
பாவமும் நீங்குவ தில்லைஐயா!
சீரிய தேவரும் இச்செயல் – கண்டுதம்
சிந்தை களித்திட மாட்டாரையா!

35. தாயென நம்பி வரும்உயிரை – யாக
சாலை நடுவில் கிடத்திஒரு
பேயெனக் கீறிப் பிளப்பதனால் – என்ன
பேறும் பெருமையும் பெற்றீரையா!

36. ஆயிரம் பாவங்கள் செய்த வெல்லாம் – ஏழை
ஆட்டின் தலையோடு அகன்றிடுமோ?
தீயவும் நல்லவும் செய்தவரை – விட்டுச்
செல்வ தொருநாளு மில்லைஐயா!

37. முன்னைப் பிறப்பினில் செய்தவினை – யாவும்
முற்றி முதிர்ந்து முளைத்தெழுந்து,
பின்னைப் பிறப்பில் வளர்ந்திடும் என்பது
பித்தர் உரையென எண்ணினீரோ?

38. கன்று பசுவை மறந்திடினும் – செய்த
கருமங்கள் உம்மை விடுமோ ஐயா!
கொன்று பழிதேட வேண்டாம் ஐயா! இனிக்
கொல்லா விரதம்மேற் கொள்ளும் ஐயா!

39. தானியம் பற்பல தாமிலையோ? – சுவை
தாங்கிய காய்கனி தாமிலையோ?
வான மழைதரு நீரிலையோ? – இவை
வாழ்ந்திடப் போதும் உணவலவோ?

40. ஊனுண வின்றி உறவுகொண்டு – நிலத்து
உள்ளதை யாவரும் உண்டிருந்தால்,
மானும் புலியும் ஒருதுறையில் – நீரை
வந்து குடிப்பதும் காணலாமே.

41. ஆதலால், தீவினை செய்யவேண்டாம் –
ஏழை
ஆட்டின் உயிரையும் வாங்க வேண்டாம்;
பூதலந் தன்னை நரகம தாக்கிடும்
புத்தியை விட்டுப் பிழையும், ஐயா!'

ஆசிய ஜோதி

–கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை

விடை காண்போம்

- ஆசிய ஜோதி – குறிப்பு வரைக.
- நும் பாடப்பகுதியில் உலகம் என்ற பொருளைச் சுட்டும் சொற்களை எழுதுக.
- பிம்பிசாரன் யாகசாலையில் புத்தர் கூறிய அறிவுரைகளைத் தொகுத்துக் கூறுக.

# 3. பாவேந்தரின் பெண் முன்னேற்றச் சிந்தனைகள்

கட்டுரை ஆசிரியர் டாக்டர். நிர்மலா மோகன் அவர்கள் மதுரைச் செந்தமிழ்க் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். இவருடைய 'இலக்கிய மணிகள்' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது இக்கட்டுரை. 'குறவஞ்சி இலக்கியம்', 'சிற்றிலக்கியங்களின் தோற்றமும் வளர்ச்சியும்', 'இலக்கியத்தென்றல்' போன்றவை இவருடைய பிற நூல்கள்.

பாரதியின் காலத்தில் வாழ்ந்தவர் பாரதிதாசன் (1891-1964). பாரதியைத் தம் முன்னோடியாகக் கொண்டு கனகசுப்புரத்தினம் எனும் தம் பெயரையே பாரதிதாசன் என மாற்றிப் பாடல்கள் புனைந்தவர். சமுதாயச் சீர்திருத்தம், பெண் விடுதலை எண்ணங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் புதுமைக் கருத்துகளை வெளியிட்டவர்; புரட்சிக்கவி என்ற பாராட்டைப் பெற்றவர். சஞ்சீவி பர்வதத்தின் சாரல், குடும்பவிளக்கு, கண்ணகி புரட்சிக் காப்பியம், பாண்டியன் பரிசு போன்றவை இவருடைய குறிப்பிடத்தக்க, குறுங்காப்பியங்கள். இயற்கை பற்றியும் தமிழ் பற்றியும் பல பாடல்களைப் பாடியுள்ளார்.

பாரதியார் இன்று நமக்கு வைத்துவிட்டுப் போன சொத்துகள் பல. இவற்றில் ஞானரதம், குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் போன்றவற்றை முக்கியமானவையாகக் குறிப்பிடலாம். பாரதியாரின் வழியில் அவரை அடியொற்றித் துறைதொறும் துடித்தெழுந்து தொண்டாற்றியவர் பாரதிதாசன். அங்ஙனம் தொண்டாற்றிய பல்துறைகளுள் ஒன்று பெண் முன்னேற்றம். அதைப் பற்றிய சிந்தனைகள் பாவேந்தர் பாரதிதாசன் பாடல்களில் அங்கிங்கு எனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்துள்ளன.

**பெண் குழந்தையின் பெருமை**

பெண் குழந்தை என்றாலே வேண்டா வெறுப்பாய்ச் செயற்படும் காலம் இது. பல பெண் குழந்தைகளுக்குக் கருவறையே கல்லறை ஆகிவரும் நூற்றாண்டு இது. ஆணாய்ப் பிறப்பது அருமை, பெண்ணாய்ப் பிறப்பது எருமை என்று பழமொழி- இல்லை பழிமொழி-பேசித் திரியும் உலகம் இது. ஆண் குழந்தையையே போற்றிப் பாராட்டிச் சீராட்டித் தாலாட்டும் இன்றைய நிலையில், பெண் குழந்தைக்கும் தாலாட்டுப் பாடிய பெருங்கவிஞர் பாரதிதாசன். குழந்தையில் ஆண், பெண் இரண்டும் ஒன்றே. இரண்டில் எதுவாக இருந்தாலும் பேணி வளர்ப்பதே தலையாய கடன் என்று அறிவுறுத்திய புரட்சிப் பாவலர் அவர்.

வண்மை உயர்வு மனிதர் நலமெல்லாம்
பெண்மையினால் உண்டென்று பேசவந்த
பெண்ணழகே!

என்று பெண் குழந்தைக்குக் கவிஞர் தம் தாலாட்டில் ஏற்றம் தந்திருப்பது நெஞ்சை அள்ளுவதாகும்.

**பெண் கல்வியின் இன்றியமையாமை**

பாவேந்தர் பாரதிதாசனின் பார்வையில் நல்ல குடும்பம் என்பது ஒரு பல்கலைக்கழகம். குடும்பம் ஒரு பல்கலைக்கழகமாக விளங்க வேண்டுமானால் குடும்பத்தில் உள்ள பெண்கள் அனைவரும் கல்வி அறிவு உடையவர்களாக விளங்க வேண்டும் என்பது அவரது கருத்து.

பெண்கட்குக் கல்வி வேண்டும் குடித்தனம்
பேணுவதற்கே;
பெண்கட்குக் கல்வி வேண்டும் மக்களைப்
பேணுவதற்கே;
பெண்கட்குக் கல்வி வேண்டும் உலகினைப்
பேணுவதற்கே;
பெண்கட்குக் கல்வி வேண்டும் கல்வியைப்
பேணுவதற்கே.

என்று பெண்கல்வியின் இன்றியமையாமையை உணர்த்தியவர்.

பெண்கள் நகை மீது மிகுந்த பற்றுக் கொண்டவர்கள் என்பது அனைவரும் அறிந்த ஒன்று. நகையாகையால் ஒரு பெண் தன் தாயிடம் அம்மா என் காதுக்கொரு தோடு, நீ அவசியம் வாங்கி வந்து போடு. கைக்கு இரண்டு வளையல் வீதம் - நீ கடன்

பட்டுப் போட்டிடு போதும்! என்று கேட்கிறாள். அவளுக்குத் தாய், பெண்ணுக்கு ஆபரணம் எது என்று அறிவுறுத்துகிறாள்:

கற்பது பெண்களுக்கு ஆபரணம் - கெம்புக்
கல்வைத்த நகை தீராத ரணம்
கற்ற பெண்களை இந்தநாடு - தன்
கண்ணில் ஒற்றிக் கொள்ளும் அன்போடு

என்று செம்மையாக வாழ மகளுக்கு வழிகாட்டு கின்றாள்.

**பெண்ணுக்கு இழைக்கப்படும் அநீதிகள்**

குழந்தை மணம், பொருந்தா மணம், கைம்மைக் கொடுமை என்று பெண்ணுக்கு நேரும் அநீதிகளைக் கண்டு கண்ணீர் வடித்தவர் பாரதிதாசன். குழந்தை மணத்தின் கொடுமையைக் கல்லும் கரையும் வண்ணம் கவிதையில் எடுத்துக்காட்டிய கவிஞர் அவர். ஏழுவயதுப் பெண் ஒருத்தி-கூவத் தெரியாத குயில், தாவாச் சிறுமான். மோவா அரும்பு-தாலிய றுத்துத் தாய் வீட்டில் இருக்க, தன் முதல் தாரத்தை இழந்த அவளது தந்தையோ வேறு ஒரு பெண்ணை மணம் புரிந்து அவளுடன் களித்திருப்பதோடு மட்டு மல்லாமல் தனது மகள்-அறியாச் சிறுபெண்-எதிரே வந்தாலும் குற்றம் என்று எண்ணுகிறார். என்னை விலக்கி என் சிறு தாயிடம் தந்தை கொஞ்சுதல் தகுமோ? தந்தை அவள் தலைமீது பூச்சூடுகின்றார்; புறக்கணித்தார் என்னை; அவருக்கு நான் மகள்! அவர் எதிர் சென்றால் சீ போ என்று புருவம் நெறிப் பதோ? என்று தன் பாட்டி மடியிற்படுத்துப் புரண்டு அழும் அந்த இளம் பெண்ணின் வேதனை என்று தீரும் என்று ஏங்குகின்றார் கவிஞர்.

கோரிக்கை அற்றுக் கிடக்குதண்ணே - இங்கு
வேரிற் பழுத்த பலா - மிகக்
கொடியதென்று எண்ணிடப் பட்டதண்ணே-குளிர்
வடிகின்ற வட்ட நிலா

என்று கணவன் இறந்தபின் கைம்மை என்னும் பெய ரில் பெண்ணின் தலையில் ஒரு துன்பச் சுமையை ஏற்றி வைக்கும் சமூகத்தின் கொடுமை மாற வேண்டும். கைம்பெண் நல்வாழ்வு பெற வேண்டும் என விழைகின்றார். வேரிற் பழுத்த பலாவாக, குளிர் வடிகின்ற வட்ட நிலாவாக, குளிர்தென்றல் சிறந்திடும் பூஞ்சோலையாக, நறுஞ்சீதளப் பூமாலையாக விளங் கும் கைம்பெண் மறுமணம் செய்து கொள்ளலாம் என்பது பாரதிதாசன் கருத்து.

**பெண் முன்னேற்றச் சிந்தனைகள்**

'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமான மாக வாழ்வம் இந்நாட்டிலே' என்றும் 'ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவில் ஓங்கி இவ்வையந் தழைக்குமால்' என்றும், 'எட்டும் அறி வினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காண் என்று கும்மியடி' என்றும் பாடினார் பாரதியார். அவரது கவிதா மண்டலத்தைச் சார்ந்த பாரதிதாசன் ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானம் என்பதைத் தம் பாடல்களில் ஆங்காங்கே வலியுறுத்துகின்றார்.

'ஆண் உயர்வு என்பதும்
பெண் உயர்வு என்பதும்
நீணிலத்து எங்கணும் இல்லை
வாணிகம் செய்யலாம் பெண்கள் - நல்
வானூர்தி ஓட்டலாம் பெண்கள்.'

'ஆண் உயர்வு, பெண் தாழ்வு' என்றுதான் யாரும் பொதுவாகக் கூறுவார்கள். பாரதிதாசனுக்கோ சொல்லளவிலும் அப்படிக் கூற-பெண்மையைத் தாழ்த்திப் பாட -மனமில்லை. எனவே, ஆண் உயர்வு என்பதும் பெண் உயர்வு என்பதும் நீணிலத்து எங்க ணும் இல்லை' என்று அவர் பாடியிருக்கிறார். நல் வானூர்தி ஓட்டலாம் பெண்கள் என்னும் அவரது வாக்கு அண்மையில் பலித்திருப்பது அவரது தீர்க்க தரிசனத்திற்கு ஒரு சான்று. அவர் நாணமும் அச்ச மும் வேண்டும் - எனில், ஆணுக்கும் பெண்ணுக்கும் வேண்டும் என்று பாடுவது, 'கற்புநிலை என்று சொல்ல வந்தால் இருகட்சிக்கும் அதைப் பொதுவில் வைப் போம்' என்று பாரதி பாடியதை நினைவூட்டு கின்றது.

அச்சமும் மடமையும் இல்லாத பெண்கள் தமிழ் நாட்டின் கண்கள் என்னும் எண்ணம் கொண்டவர் பாரதிதாசன். எனவே, அவர் படைத்துக் காட்டும் புது

மைப் பெண்கள் வீரத்தில் சிறந்தவர்களாக – கல்வியறிவு மிகுந்தவர்களாக – குடும்பத்தைப் பேணிப் பாதுகாக்கும் அன்பு மிகுந்தவர்களாக – தம் உரிமைக்காகக் குரல் கொடுப்பவர்களாக விளங்குகிறார்கள். 'சஞ்சீவி பர்வதத்தின் சாரலிலே' வரும் வஞ்சி, 'புரட்சி கவி'யிலே வரும் அமுதவல்லி, 'வீரத்தாயில்' வரும் விஜயராணி போன்ற பெண்கள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார்.

'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்' என்னும் காவியத்திலே வரும் குப்பன் கோழை, அச்சம் நிறைந்தவன்; ஆனால் வஞ்சியோ,

> பெண்ணுக்குப் பேச்சுரிமை வேண்டாம் என்கின் நீரோ?
> மண்ணுக்கு கேடாய் மதித்தீரோ பெண்ணினத்தை?
> பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு
> மண்ணடிமை தீர்ந்துவருதல் முயற்கொம்பே.

என்று கூறும் உள்ள உறுதி நிறைந்தவளாகப் பெண்ணடிமையை எதிர்த்துக் குரல் கொடுப்பவளாக – பகுத்தறிவு மிக்கவளாக – விளங்குகிறாள்.

பெண்கள் எந்நேரமும் ஏதாவது ஒரு வேலையைச் செய்தவாறு சுறுசுறுப்பாக இயங்க வேண்டும் என்பது பாரதிதாசன் கருத்து. வேலையில்லாத நேரத்திலும் வீட்டிலுள்ளோர் யாவரும் ஏதேனும் சிறுதொழில் செய்தாவது வாழலாம்; வாழ வேண்டும். அப்படி வாழ முயலாது மூலையிலேயே குந்தியிருக்கும் பெண்ணை மந்தி என்று கடுமையாகச் சாடுகிறார் கவிஞர். இங்ஙனம், வேலைபார்க்காது சோம்பித் திரியும் பெண்களைச் சாடும் கவிஞர் வீட்டின் முன்னேற்றத்திற்காக அல்லும் பகலும் பாடுபடும் பெண்களைப் பாராட்டவும் தவறவில்லை. வேலை செய்யும் பெண்கள் வீட்டின் இரு கண்கள் என்பது வேலைப்பார்க்கும் பெண்களுக்கு அவர் சூட்டும் புகழாரம்.

**அமைதியினை நிலைநாட்ட எளிய வழி**

பெண்களும் ஆண்கள் தாமும் பெருந்தமிழ் நாடு தன்னில் தண் கடல் நிகர்த்த அன்பால் சமானத்தர் ஆனார் என்ற பண் வந்து காதிற் பாயப் பருகுநாள் எந்த நாளோ? என்று ஏங்கிய பாரதிதாசன், இவ்வுலகில் அமைதியினை நிலைநாட்ட ஓர் எளிய வழியை எடுத்துரைக்கிறார்:

> இவ்வுலகில் அமைதியினை நிலைநாட்ட வேண்டின்
> இலேசு வழி ஒன்று உண்டு பெண்களை ஆடவர்கள்
> எவ்வகையும் தாழ்த்துவதை விட்டொழிக்க வேண்டும்...
> மகளிரெலாம் கல்வியறிவு ஒழுக்கம் உளதாயின்
> மருத்துவமே வேண்டாவாம்; பிணிமூப்பு வாரா;
> மகளிரெல்லாம் அரசியலைக் கைப்பற்றி ஆண்டால்
> மாநிலத்தில் போரில்லை; சாக்காடும் இல்லை!

இங்ஙனம், பாவேந்தர் பாரதிதாசன் பெண் முன்னேற்றம் குறித்துப் பாடியுள்ள முற்போக்குச் சிந்தனைகளைக் கசடறக் கற்போம்; கற்றபின் அவற்றின் வழி நிற்போம்; இந்நாட்டு மகளிரெல்லாம் கல்வியறிவு ஒழுக்கம் பெறுவோம்; அரசியலைக் கைப்பற்றி ஆள்வோம்; பிணி, மூப்பு, போர், சாக்காடு இல்லாத பொன்னுலகை உருவாக்குவோம்.

**– டாக்டர் நிர்மலா மோகன்**

**விடை காண்போம்**

- பெண்ணிற்கு உண்மையான ஆபரணம் எதுவெனப் பாரதிதாசன் கூறுகிறார்?
- பாரதியார் விட்டுச் சென்ற சொத்துகளில் முக்கியமானவை எவை என்று கட்டுரையாசிரியர் குறிப்பிடுகின்றார்?
- குடும்பம் ஒரு பல்கலைக்கழகமாக இருக்க வேண்டுமெனில் பெண்கள் எவ்வாறு விளங்க வேண்டும்?

## கற்றல் செயல்பாடுகள்

❖ **பாடி மகிழ்வோம்**

பாரதி பாடலைப் பல்வேறு இசையமைப்பில் தனியாகவும் குழுவாகவும் பாடி மகிழலாம்.

❖ **இடஞ்சுட்டிப் பொருள் விளக்குவோம்**

- "அல்லலுற வேண்டாம் – இனித்துயர் ஆறி வருவாயம்மா".
- "நம்பியிருப்பவர் கும்பி எரிந்திடில் நன்மை உமக்கு வருமோ ஐயா".
- "ஆயிரம் பாவங்கள் செய்தவெல்லாம் – ஏழை ஆட்டின் தலையோ டகன்றிடுமோ".

❖ **வாக்கியத்தில் அமைப்போம்**

- அடியொற்றி
- அங்கிங்கு எனாதபடி
- கல்லும் கரையும் வண்ணம்

❖ **நிகழ்ச்சித் தொகுப்பு**

- பாரதியின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து சுவையான நிகழ்ச்சிகளைக் கண்டறிந்து அவற்றின் அடிப்படையில் உரைச்சித்திரம் தயார் செய்க.

❖ **கட்டுரை வாசிப்போம்**

- உங்கள் வட்டார மக்களின் தொழில்கள் குறித்துக் கட்டுரை எழுதி இலக்கிய மன்ற கூட்டத்தில் வாசியுங்கள்.

❖ **வடிவமாற்றம் செய்வோம்**

- பாடலின் திரண்ட கருத்தை உரைநடை வடிவில் எழுதுக.

❖ **நடித்துக் காட்டுவோம்**

- பிம்பிசார மன்னனின் யாகசாலையில் நடந்த நிகழ்ச்சிகளை நாடகமாக நடித்துக் காட்டுக.

❖ **உரைநடையாக்குவோம்**

- பிம்பிசார மன்னனுக்குப் புத்தர் கூறிய அறிவுரைகளை உரைநடையாக மாற்றி எழுதுக.

❖ **கலந்துரையாடுவோம்**

- உயிர்க்கொலை தவிர்த்தல்
- வரதட்சணை
- இன்றைய பெண்களின் நிலை
- மகளிர் முன்னேற்றத்திற்கு அரசு எடுக்கும் நடவடிக்கைகள்
- ஆண் பெண் சமத்துவம்
- 'மத நல்லிணக்கம்' அல்லது 'வேற்றுமையில் ஒற்றுமை'

என்னும் தலைப்புகளில் வகுப்பறையில் கலந்துரையாடல் நிகழ்த்துக.

❖ **வாழ்க்கை வரலாறு எழுதுவோம்**

- புத்தர் பெருமான் வாழ்க்கை வரலாறு
- வள்ளலார் வரலாறு

❖ **செய்தியாக்குவோம்**

- கீழ்வரும் பொருள் பற்றிப் பத்திரிகைச் செய்தி படைப்போம்.
  - ◆ உயிர்க்கொலை தவிர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள்.

❖ **கவியரங்கு நடத்துவோம்**

- 'ஒன்றே குலம்' என்ற தலைப்பில் சொந்தக் கவிதைகள் இயற்றிக் கவியரங்கில் வாசியுங்கள். சிறந்த கவிதையைத் தேர்ந்தெடுத்து, பள்ளிக் கையெழுத்து இதழில் வெளியிடுங்கள்.

❖ **இசைப்போட்டி நடத்துவோம்**

- பாரதியின் வேடம் புனைந்து அவர்பாடிய பாடல்களைப் இசைப்போட்டியாக நடத்துக.

❖ **திறனாய்வு செய்வோம்**

- உங்களைக் கவர்ந்த ஏதேனும் பாரதி பாடல் ஒன்றைக் கூறுங்கள். அப்பாடலின் சிறப்புகளைப் பற்றித் திறனாய்வு செய்யுங்கள்.

❖ **இலக்கணக் குறிப்பு எழுதுவோம்**

- கடலோரம்
- இடுகின்ற செல்வம்
- தாங்குபுயல்
- மாதவம்
- செங்கதிர்
- தொடுவானம்
- சீவனிலாத
- சந்திரர் சூரியர்
- பார்த்து நின்றான்

❖ **எனது குறிப்பேடு**

- தேசிய ஒருமைப்பாட்டை உணர்த்தும் பாரதியின் பிற பாடல்களைத் தொகுத்து 'எனது குறிப்பேட்டில்' எழுதுக.
- பாடப்பகுதியில் வரும் பாரதியார் பாடல்களில் எவையேனும் உங்களுக்கு விருப்பமான இரண்டு

பாடல்கள் மனப்பாடம் செய்து 'எனது குறிப்பேட்டில்' எழுதுக. பிடித்ததற்கான காரணத்தையும் சுட்டுக.

- உங்களுக்குப் பிடித்த எதேனும் மூன்று பாடல்களை மனப்பாடம் செய்து எனது குறிப்பேட்டில் எழுதி, பிடித்ததற்கான காரணத்தையும் சுட்டுக.
- ஷண்முக சுப்பையாவின் புதுக்கவிதைகள் சிலவற்றைத் திரட்டி 'எனது குறிப்பேட்டில்' எழுதுக.
- மரபுக்கவிதை- புதுக்கவிதை இவற்றிற்கிடையிலான வேறுபாடுகளைக் கண்டறிந்து 'எனது குறிப்பேட்டில்' எழுதுக.

❖**எனது நூலகக் குறிப்பேடு**

- தேசிய ஒருமைப்பாடு குறித்த பிற கவிஞர்களின் பாடல்களைத் திரட்டி இப்பாடலோடு ஒப்பீடு செய்க.
- திரைப்படங்களில் இடம் பெற்றுள்ள பாரதி பாடல்களைத் திரட்டி 'எனது நூலகக் குறிப்பேட்டில்' எழுதுக.
- பாரதி, பாரதிதாசன், கவிமணி ஆகிய முப்பெருங்கவிஞர்களின் பெண் விடுதலைப் பாடல்களைத் திரட்டி 'எனது நூலகக் குறிப்பேட்டில்' எழுதுக.
- செய்தித்தாள்களில் - இதழ்களில் வரும் உழைப்பால் உயர்ந்த பெண்கள் பற்றிய செய்திகளைத் திரட்டுக.
- பெண் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட டாக்டர் முத்துலட்சுமி அம்மையாரின் வாழ்க்கை நிகழ்வுகளைத் தொகுத்துக் கட்டுரை வரைக.

❖**எனது படைப்பாற்றல் ஏடு**

- 'தேசிய ஒருமைப்பாடு' என்ற தலைப்பில் கட்டுரை எழுதி, சிறந்த கட்டுரையைப் பள்ளிக் கையெழுத்து இதழில் வெளியிடுக.

❖**பட்டிமன்றம் நடத்துவோம்**

- பெண்கள் முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பது அறியாமையா? அடக்கு முறையா? என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடத்துக.
- இரு குழுக்களாகப் பிரிந்து 'மனிதனின் சீர்கேட்டிற்குக் காரணமாக இருப்பது சூழ்நிலையா? ஊழ்வலியா?' என்னும் தலைப்பில் பட்டிமன்றம் நடத்துக.

❖**வாசித்துப் மகிழ்வோம்**

- காக்கை குருவி எங்கள் ஜாதி – நீள்
  கடலும் மலையும் எங்கள் கூட்டம்
  நோக்கும் திசையெலாம் நாமின்றி வேறில்லை
  நோக்க நோக்கக் களியாட்டம்
  (பாரதியார்)
- வானந்தான் பாடிற்றா? வானிலவு பாடிற்றா?
  தேனை அருந்திச் சிறுதும்பி மேலேறி
  நல்லிசை நல்கிற்றா? – நடுங்கும் இடிக் குரலும்
  மெல்லிசை பயின்று மிக இனிமை
  தந்ததுவோ
  (பாரதிதாசன்)



- வானவர் மகளிர் கற்பக மலரை
  வனசமென் கரமலர் ஏந்தித்
  தானமீ திருந்து நெறிஇரு மருங்கும்
  தாரைமா மழைஎனச் சொரியத்
  தேனுலாம் காவும் வயன்மடு வெற்பும்
  சென்றொரு சமதலம் நின்று
  நானிலப் பரப்பில் நிற்குமா னவராம்
  நரலையை நோக்கினர் நபியே
  (சின்னச் சீறா)

தொடர் கருத்து அறிவோம்

### இயேசு காவியம்

இருபதாம் நூற்றாண்டு தமிழுக்குத் தந்த மாபெரும் கவிஞர்களுள் ஒருவர் கண்ணதாசன். இவர் 'கவியரசு' என்ற பாராட்டைப் பெற்றவர். உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் ஆயிரக் கணக்கான திரையிசைப் பாடல்களைப் பாடிய பெருமை இவருக்குண்டு. பழந்தமிழ் இலக்கியங் களிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். மாங்கனி, ஆட்டனத்தி ஆதிமந்தி, தைப்பாவை போன் றவை இவர்தம் குறுங்காவியங்கள். இயேசு பெருமானின் வரலாற்றை எளிய இனிய நடை யில் பாடிய கவிதை நூலே 'இயேசு காவியம்'. இந்நூலில் 'உவமைவழிப்போதனை' என்னும் பகுதியிலமைந்த சில பாடல்கள் இங் குத் தரப்பட்டுள்ளன. காலந்தோறும் மக்களின் நல்வாழ்வுக்காகவும் சமுதாய மறுமலர்ச்சிக்கா கவும் தம் வாழ்வை அர்ப்பணித்த மகான்கள் பலர். இவர்களில் புத்தர், இயேசு, காந்தி ஆகி யோர் குறிப்பிடத்தக்கவர்கள். புத்தர் பெருமா னின் கருணை உள்ளத்தைக் கனிவுடன் பாடி னார் கவிமணி. இயேசு நாத ரின் மனிதாபி மானத்தை யும் உபதேசக் கருத்துகளை யும் உவமைகள் வாயிலாக அழகுறப் பாடுகின்றார், கண்ணதாசன்.



**கடலோரம் ஒருநாள்இ யேசு நின்றார்**
**கனிவான சீடர்களும் அருகே நின்றார்**
**உடலாலே தவறான மக்த லேனா**
**உடல்கெட்டோர் திருந்தியவர் பலபேர் நின்றார்**
**இடுகின்ற செல்வம்நிறை மகளிர் நின்றார்**
**இடுவதனை ஏற்போரும் அருகே நின்றார்**
**தொடுவானம் போலவந்த இயேசு மைந்தன்**
**சொல்கின்றார் அனைவோர்க்கும் உவமைச் செய்தி.**

**விதைக்கின்ற வயற்காரன் எடுத்தான் வித்தை**
**வீழ்ந்தனவே சிலஅந்த வரப்பின் ஓரம்!**
**அதைவந்த பறவைகளே கொத்திப் போகும்**
**அவை கொஞ்சம் பாறையிலும் விழவுங் கண்டான்**
**இதமான இடமின்றி அவையெல் லாமும்**
**இறகுமுளைக் கும்முன்னே பட்டுப் போகும்!**
**வதைமுள்ளின் நெருக்கடியில் விதைகள் வீழ்ந்து**
**வளராமல் கருகிவிடும் ஒன்று கேட்பீர்!.**

**நல்லநிலத் தின்மீது விழுந்த வித்து**
**நாள்தோறும் அறுவடைக்கு நிற்கும் சொத்து**
**சொல்லுகிறேன் அவற்றினிலும் பதர்கள் உண்டு**
**சோலையிலே இருக்கின்ற புதர்கள் போலே!**
**வல்லவிதை நூற்றுக்கு நூறும் உண்டு**
**வரவினிலே சரிபாதி காலும் உண்டு!**
**நல்லசெவி உள்ளோர்கள் கேட்டுக் கொள்க**
**நாமிதனைச் சொல்லுகிறோம் என்றார்இயேசு!**

**-கண்ணதாசன்**

### புதுக்கவிதை

இலக்கண வரம்பை மீறாமல் மரபு வழிநின்று கவிதை படைத்தவர் பாரதி. எனினும் ஒரு புது முயற்சி என்ற நிலையில் சில வசனகவிதைக ளையும் அவர் படைத்துள்ளார்.

**காற்றே வா....... மெதுவாக வா**
**ஜன்னல் கதவை அடித்து உடைத்து விடாதே**
**காயிதங்களை யெல்லாம் எடுத்து விசிறி விடாதே**
**அலமாரிப் புத்தகங்களைக் கீழே தள்ளி விடாதே**
**பார்த்தையா? இதோ தள்ளிவிட்டாய்**
**புஸ்தகத்தின் ஏடுகளைக் கிழித்து விட்டாய்**
**மறுபடி மழையைக் கொண்டு வந்து சேர்த்தாய்**
**வலியிழந்தவற்றைத் தொல்லைப்படுத்தி**
**வேடிக்கை பார்ப்பதிலே நீ மகா சமர்த்தன்.**

எனக் காற்றைப் பற்றிப் பாடும் வரிகளைப் பார தியின் வசன கவிதைக்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம்.

இத்தகைய வசன கவிதைகளே பிற்காலப் புதுக்கவிதையின் வளர்ச்சிக்கு வழிகோலின. இலக்கணக் கட்டுப்பாடுகளுக்கு உட்படாமல், ஓசை நயம் பற்றிக் கவலைப்படாமல், உணர்வுகளின் வெளிப்பாடாகத் தோன்றியவை புதுக் கவிதைகள். பெரும்பாலான புதுக்கவிதைகளும் சமகாலப் பிரச்சினைகளை அங்கதச் சுவையுடன் எடுத்துக் கூறுகின்றன.

- **என்னுடைய சம்பளநாளில்**
  **எண்ணி வாங்குகிற**
  **பளபளக்கும் நோட்டுகளில்**
  **எவரெவர் முகமோ**
  **தெரியும்**
  **என் முகம் தவிர**

என மாதச்சம்பளக்காரர்களின் மனநிலையை 'முதல் தேதி' என்ற புதுக்கவிதையாக்கியுள்ளார் மு. மேத்தா.
இதே பொருளை இன்னும் குறுகிய வடிவில்

- **கவர் நிறைய கடன்**
  **வாடகைப் புன்னகை**
  **முதல் தேதி**

எனப் பாடுகின்றார் மு. முருகேஷ். இத்தகைய மூன்றடிக் கவிதைகள் ஹைகூ கவிதைகள் அமைப்பில் உள்ளன.

**❖அறிந்து கொள்வோம்**

புதுக்கவிஞர்கள் சிலரை அறிந்து கொள்ளுங்கள்.

- அப்துல் ரகுமான்
- தமிழன்பன்
- நா. காமராசன்
- மீரா
- ஷண்முக சுப்பையா
- சிற்பி
- மு. மேத்தா
- ஞானக்கூத்தன்
- வைரமுத்து
- பசுவய்யா

**❖குறிப்பு எழுதுவோம்**

- புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிச் சிறுகுறிப்பு வரைக.

**❖திறனாய்வு செய்வோம்**

- உங்களைக் கவர்ந்த ஏதேனும் புதுக்கவிதை ஒன்றினைத் திறனாய்வு செய்து மதிப்பிடுக.

.

- உயிர்களிடத்து அன்பு காட்டிய மனுநீதிச் சோழன், சிபிச்சக்கரவர்த்தி ஆகியோர் கதைகளைத் திரட்டுக.

**❖ திரட்டுவோம் எழுதுவோம்**

- பாரதியின் விடுதலைப்பாடல்களைத் தொகுத்துத் திறனாய்வுக் கட்டுரை வரைக.

**❖ புதுக்கவிதைப் பட்டறை**

- தமிழ்ப் பேராசிரியர் ஒருவரைப் பட்டறையில் பங்குபெறச் செய்து புதுக்கவிதை பற்றிச் சொற்பொழிவாற்றச் செய்யலாம்.
- பட்டறையில் மாணவர்கள் இயற்றிய புதுக்கவிதைகளை வாசிக்கலாம்; தொகுத்து வெளியிடலாம்.

**❖ பட்டியல் உருவாக்குவோம்**

- ஒவ்வொரு துறையிலும் சாதனை படைத்த பெண் மணிகளின் பட்டியல் உருவாக்குவோம்.
  **மாதிரி** : இந்தியாவின் முதல் பெண் பிரதமர் - இந்திரா காந்தி.

**❖ திரட்டுவோம்**

- விதை பற்றி வரும் பழமொழிகளைத் திரட்டலாம்.
  **மாதிரி** : வித்துகுணம் பத்து குணம்.

**❖ நயம் பாராட்டுவோம்**

'நல்லநிலத்தின்மீது விழுந்த வித்து
நாள்தோறும் அறுவடைக்கு நிற்கும் சொத்து
சொல்லுகிறேன் அவற்றினிலும் பதர்கள் உண்டு
சோலையிலே இருக்கின்ற புதர்கள் போலே!'

**❖ எனது குறிப்பேடு**

- இயேசு நாதர் மக்களுக்குரைத்த போதனைகளைச் சேகரித்து 'எனது குறிப்பேட்டில்' எழுதுக.

**இலக்கண விளக்கம் பெறுவோம்**

**புணர்ச்சி**

திரு+குறள்= திருக்குறள்

திருக்குறள் என்னும் சொல் '**திரு**,' '**குறள்**' என்னும் இரு சொற்களால் ஆகிய தொடர் ஆகும். இத்தொடரில் '**திரு**' என்னும் சொல் முதலில் நிற்கிறது. இது '**நிலைமொழி**' எனப்படும். '**குறள்**' என்னும் சொல் அதனுடன் வந்து சேர்கிறது. ஆதலால் இது '**வருமொழி**' எனப்படும்.

**'திரு'** என்னும் நிலை மொழியின் ஈற்றிலுள்ள **'உ'** என்னும் உயிர் எழுத்தும் **'குறள்'** என்னும் வரு மொழியின் முதலிலுள்ள **'க்'** என்னும் மெய்யெழுத்தும் தக்கவாறு இணைந்து திருக்குறள் என்றாயிற்று.

இவ்வாறு நிலைமொழியின் ஈற்றெழுத்தும் வரு மொழியின் முதலெழுத்தும் இணைவதைப் **'புணர்ச்சி'** என்பர். இது இரண்டு வகைப்படும்.

**1) இயல்பு புணர்ச்சி**

தமிழ் + மொழி = தமிழ்மொழி
பனை + மரம் = பனைமரம்
பொன் + மணி = பொன்மணி

தமிழ், பனை, பொன் என்பவை நிலைமொழிகள். மொழி, மரம், மணி என்பவை வருமொழிகள். இவை சேரும்போது எவ்வித மாறுபாடும் நிகழ்வதில்லை.

இவ்வாறு நிலைமொழியும் வருமொழியும் எவ்வித மாறுபாடுமின்றி இணைவது (புணர்வது) இயல்பு புணர்ச்சி எனப்படும்.

**2) விகாரப் புணர்ச்சி**

நிலைமொழியும் வருமொழியும் புணரும் போது ஏதேனும் மாற்றங்கள் ஏற்படுமாயின் அதனை விகாரப்புணர்ச்சி என்பர். இம்மாற்றங்கள் மூன்று நிலைகளில் நிகழும்.

அவை தோன்றல், திரிதல், கெடுதல் என்பனவாம்.

**தோன்றல் விகாரம்**

மா+ பழம் =மாம்பழம்
அவரை + காய் = அவரைக்காய்

**'மா'** என்னும் நிலைமொழியுடன் **'பழம்'** என்னும் வருமொழி புணரும்போது இடையில் 'ம்' என்னும் மெய்யெழுத்து புதிதாகத் தோன்றி, **'மாம்பழம்'** என்றாயிற்று.

**திரிதல் விகாரம்**

விண் + நாடு = விண்ணாடு
பல் + பசை = பற்பசை

முதல் தொடரில் வருமொழியின் முதலில் உள்ள மெய்யெழுத்து (ந்) நிலைமொழியின் ஈற்றிலுள்ள மெய்யெழுத்தாகத் (ண்) திரிந்துள்ளது.

இரண்டாவது தொடரில் நிலை மொழியின் ஈற்றிலுள்ள 'ல்' என்னும் மெய்யெழுத்து 'ற்' ஆகத் திரிந்துள்ளது.

**கெடுதல் விகாரம்**

வீரம்+வேல் = வீரவேல்
நான்கு+ மறை= நான்மறை

இவற்றுள் வீரம், நான்கு என்னும் நிலைமொழிகள் வருமொழிகளுடன் புணரும்போது ஈற்று எழுத்துகள் (ம், கு) கெட்டுப் புணர்ந்துள்ளன.

**வஞ்சப் புகழ்ச்சி அணி**

ஒன்றைப் பழிப்பதுபோலப் புகழ்வதும், புகழ்வது போலப் பழிப்பதும் 'வஞ்சப்புகழ்ச்சி' அணி எனப்படும்.

(எ.டு) தேவர் அனையர் கயவர் அவரும்தாம்
மேவன செய்தொழுக லான்.

இக்குறளில், தேவர்கள் மனம் விரும்பியவாறு செயல்களைச் செய்யும் ஆற்றலுடையோர். நன்மை விளையும் செயல்களையே செய்வர். கயவர்களும் தம் மனம் விரும்பிய செயல்களையே செய்யினும் கீழ்மைச் செயல்களையே செய்வர் என்கிறார்.

கயவர்களைத் தேவர்களோடு ஒப்பிட்டுப் புகழ்வதுபோலக் கூறி, அவர்களின் கீழ்மைக் குணங்களைப் பழித்துக் கூறுகிறார் புலவர்.

இவ்வாறு புகழ்வதுபோலப் பழித்துக் கூறியதால் இக்குறளில் அமைந்த அணி 'வஞ்சப்புகழ்ச்சி' அணி ஆகும்.

**விடை காண்போம்**

- இயல்பு புணர்ச்சி என்றால் என்ன? விளக்குக.
- விகாரப் புணர்ச்சியைப் பாடப்பகுதி சான்றுடன் தெளிவுபடுத்துக.
- வஞ்சப்புகழ்ச்சி அணி என்பது யாது? சான்றுடன் விளக்குக.